சிங்கப்பூர்

# பெற்றோர் பொய் சொன்னால்... பிள்ளையும் பொய் சொல்லலாம்: NTU ஆய்வு

வாசிப்புநேரம் - 1 நிமிடம்



(படம்: Pixabay)

வெளியீடு : 08 Feb 2024 09:00AM

Aa

"ஒழுங்காக நடந்துகொள்ளவில்லை என்றால் காவல்துறையிடம் பிடித்துக் கொடுத்துவிடுவேன்!"

பிள்ளைகளை வழிக்குக் கொண்டுவரப் பெற்றோர் சிலர் அப்படிச் சொல்வதுண்டு.

அப்படிச் செல்லமாகப் பொய் சொல்லி மிரட்டி வளர்க்கப்படும் பிள்ளைகள் பெற்றோரிடம் பொய் சொல்ல வாய்ப்பு இருப்பதாக நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம் நடத்திய ஆய்வில் தெரியவந்துள்ளது.

பெற்றோர் பொய் சொல்கிறார்கள் என்று பிள்ளைகளுக்குத் தெரிந்தாலும் தெரியாவிட்டாலும், பிள்ளைகள் அவ்வாறு நடந்துகொள்வதாகப் பல்கலைக்கழகம் சொன்னது.

ஏன்?

பொய் சொன்னால் காரியம் நடக்கிறது என்பதைப் பிள்ளைகள் கற்றுக்கொள்வதாகப் பல்கலைக்கழகம் கூறியது.

பெற்றோரின் பொய்களால் பிள்ளைகளிடம் எதிர்மறையான உணர்வுகள் ஏற்பட்டிருக்கலாம்.

அது பெற்றோர்-பிள்ளை உறவைப் பாதித்து, பிள்ளைகள் பெற்றோரிடம் பொய் சொல்லும் சாத்தியத்தை அதிகமாக்குவதாக ஆய்வு தெரிவித்தது.

564 பெற்றோர்களும் அவர்களின் பிள்ளைகளும் ஆய்வில் கலந்துகொண்டனர்.